**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.03/2023 in O.S.No.158/2023**

(TNTM03000401/2023)

ஜெயசங்கர் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

உமாபதி ... எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 08.07.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மனோகரன்,M.B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சிகாமணி,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனு சொத்தில் மனுதாரர்/வாதியின் அனுபவத்தை எதிர்மனுதாரர் தடை ஏற்படுத்த முயற்சி செய்வதால் இத்தாவா முடியும் வரையில் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால தடையுத்திரவு வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவார். மனுவில் கண்ட ஷெட்யூலில் கண்ட சொத்தான சர்வே எண்.326/17ல் கண்ட மொத்த வீஸ்தீரணம் ஆன ஏக்கர் 0.67ல் ஏக்கர் 0.25 சென்ட் கொண்ட அயன் புன்செய் நிலமானது ஆதியில் தாவாவில் கண்ட எதிர்மனுதாரரின் தந்தை சீனிவாசன் என்பவருக்கு பிதுராஜ்ஜிதமாய் பாத்தியப்பட்ட சொத்து ஆகும். மனு ஷெட்யூலில் கண்ட புன்செய் சர்வே எண்.326/17 ஆனது சப்டிவிஷன் செய்யப்பட்டு அதன் பேரில் 326/17எ–ல் கண்ட ஏக்கர் 0.30 சென்ட் ஆனது அருணாச்சலம் மகன் ராதாகிருஷ்ணன் பெயரிலும், சர்வே எண்.326/17பி ஆனது ஏக்கர் 0.20 சென்ட் ஆனது வீரபத்திரன் கவுண்டர் மகன் சடைய கவுண்டர் பெயரிலும், மற்றும் சர்வே எண். 326/17சி–யில் கண்ட ஏக்கர் 0.17

சென்ட் ஆனது வீரசாமி மகன் முனுசாமி பெயரிலும் யூ.டி.ஆர்.யில் கண்டவாறு அ பதிவேட்டில் குறிப்பிடபட்டுள்ளது.

2. மேற்கண்ட சடைய கவுண்டர் உடைய மகன்தான் தாவாவில் கண்ட 2ம் பிரதிவாதி ஆவார். மேற்கண்ட 2ம் பிரதிவாதி தாவா ஷெட்யூலில் கண்ட சர்வே எண்.326/17ல் ஏக்கர் 0.25 சென்ட்டினை 20.08.1992ல் தொப்பை கவுண்டர் குமாரர் பூங்கான் என்பவருக்கு சரியான பிரதிபலன் முன்னிலைக்கு ரூ.9000/-க்கு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு கண்ணமங்கலம் சார்பதிவக ஆவண எண்.681/1992ன் பேரில் கிரையம் செய்து விட்டார். மேற்கண்ட 2ம் பிரதிவாதி கிரையம் செய்த போது மேற்கண்ட கிரைய பத்திர ஆவணத்தில் தனக்காகவும் மற்றும் தன்னுடைய மகள்கள் ஆன மைனர் குமாரத்திகள் உமா, லட்சுமி மற்றும் மைனர் குமாரர்கள் ஆன உமாபதி மற்றும் பிரபாகரன் ஆகியோர்களுக்காக கிரையம் செய்து உள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது. மேற்கண்ட நபர்களில் உமாபதி என்பவர் தான் தாவாவில் கண்ட 1ம் பிரதிவாதி ஆவார். மேற்கண்ட பூங்கான் என்பவர் தான் 20.08.1992ல் கிரையம் பெற்ற சொத்தினை அனுபவித்து வந்து அதன் பேரில் 21.01.2002ல் சரியான பிரதிபலன் முன்னிலைக்கு வாதி பெயருக்கு ரூ.15,000/-க்கு கண்ணமங்கலம் சார்பதிவக கிரைய பத்திர ஆவண எண்.33/2002 முன்னிலைக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். மேற்கண்ட 21.01.2002 தேதியிட்ட கிரைய பத்திர ஆவணத்தில் ஷெட்யூலில் கண்டுள்ளவாறு சர்வே எண்.326/17ல் கண்ட ஏக்கர் 0.25 சென்ட்டினை நான் அடைந்து இன்று வரை அனுபவித்து வருகின்றேன்.

3. நான் மனு சொத்தினை கிரையம் பெற்றது போல் மேற்படி சர்வே எண்.326/17ல் கண்ட ஏக்கர் 0.16 3/4 சென்ட் கொண்ட இடத்தினை வீராசாமி கவுண்டர் குமாரர் முனுசாமி கவுண்டர் என்பரிடமிருந்து சரியான பிரதிபலன் முன்னிலைக்கு 27.07.2000 ஆண்டில் ரூ.1,52,000/-க்கு கண்ணமங்கலம் சார்பதிவகம் கிரைய பத்திர ஆவண எண்.928/2000 முன்னிலைக்கு மனுதாரர் கிரையம் பெற்று இருந்தார். மேற்கண்ட 27.07.2000 தேதியிட்ட கிரைய பத்திர ஆவணத்தில் ஷெட்யூலில் கண்டுள்ளவாறு சர்வே எண்.326/17ல் கண்ட ஏக்கர் 0.16 3/4 செட்டினை மேற்கண்ட மனுதாரர் கிரையம் பெற்ற நாள் முதல் இன்று வரை அடைந்து அனுபவித்து வருகின்றார்.

4. ஆக மனுதாரர் மனு ஷெட்யூலில் கண்ட சர்வே எண்.326/17ல் ஏக்கர் 0.25 சென்ட்டினை பூங்கான் என்பவரிடமிருந்து 21.01.2002 தேதியிட்ட ஆவண எண்.33/2002 முன்னிலைக்கு கிரையம் பெற்றும் மற்றும் மனுதாரர் சர்வே எண்.326/17ல் கண்ட ஏக்கர் 0.16 3/4 சென்ட்டினை முனுசாமி கவுண்டர் என்பவரிடமிருந்து 27.07.2000 தேதியிட்ட ஆவண எண்.928/2000 முன்னிலைக்கு ஏக்கர் 0.41 3/4 சென்ட்டினை அடைந்து இன்று வரை அனுபவித்து வருகிறார். மேலும் இது சம்பந்தமாக மனுதாரர் பெயருக்கு பட்டா எண்.2630 என்று 13.10.2022ல் வருவாய்

துறையினர் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கணினி வழியாக எடுக்கப்பட்ட பட்டா எண்.2630 சம்பந்தப்பட்ட பட்டா நகல் தாக்கல் செய்யப்படுகிறது. மேற்கண்ட 2 பிரதிவாதியானவர் தாவா சொத்து சம்பந்தமாக 20.08.1992ல் பூங்கான் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு கிரையம் கொடுத்த சங்கதி ஏற்கனவே நன்கு அறிந்தவர் ஆவார். மேலும் அவருடைய மக்கள் ஆன உமா, உமாபதி, லட்சுமி மற்றும் பிரபாகரன் ஆகியோருக்கும் ஏற்கனவே மேற்கண்ட கிரையம் கொடுத்த விஷயம் அறிந்தவர்கள் ஆவார்கள். மேலும் மேற்கண்ட 2ம் பிரதிவாதியின் மைனர் குமாரர்கள் அனைவரும் தாங்கள் மேஜர் வயது அடைந்தவுடன் 18 வயது பூர்த்தி ஆன உடன் அதிலிருந்து 3 வருட காலத்திற்குள் மேற்கண்ட 2ம் பிரதிவாதி தாவா சொத்து சம்பந்தமாக பூங்கான் என்பவருக்கு கிரையம் கொடுத்தது குறித்து எவ்விதமான ஆட்சேபனையும் எழுப்பி இது சம்பந்தமாக கிரைய பத்திர ஆவண எண்.681/1992 சம்பந்தமாக சட்ட ரீதியாக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிட தக்கது ஆகும். மேலும் மேற்கண்ட 20.08.1992ல் ஆவண எண்.681/1992ன் பேரில் எழுதப்பட்ட கிரைய பத்திரத்தில் தாவாவில் கண்ட 1ம் பிரதிவாதியானவர் 9 வயது உடையவர் ஆக குறிப்பிடபட்டுள்ளது. மேலும் மேற்கண்ட 1ம் பிரதிவாதியானவர் 2001 ஆம் ஆண்டே 18 வயதை பூர்த்தி செய்தவர் ஆவார். மேலும் அவர் மேற்கண்ட கிரைய பத்திரத்தின் பேரில் ஆட்சேபனை இருப்பின் இது சம்பநத்மாக 21 வயதுக்குள் அதாவது 2004 ஆண்டுக்குள் இது குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும்.

5. மேற்கண்ட 2ம் பிரதிவாதியானவர் தாவா சொத்து சம்பந்தமாக 23.02.2009ல் ஓர் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை 1ம் பிரதிவாதி பெயருக்கு ஆவண எண்.328/2009ன் பேரில் சட்டத்திற்கு புறம்பாக உண்மைகளை மறைத்து 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் எழுதி கொடுத்துள்ளார். இது சம்பந்தமாக வாதிக்கு 14.03.2023ல் தெரிய வந்தது அதன் பேரில் வாதியானவர் கண்ணமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 14.03.2023ல் தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்றினை பார்த்தபோது சட்டத்திற்க்கு புறம்பான முறையில் 23.02.2009ல் ஓர் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் சட்டத்திற்கு புறம்பாக மோசடியாக ஆவணங்கள் ஏற்படுத்தி இருப்பது தெரிய வந்தது. மேலும் மேற்கண்ட 23.02.2009ல் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திர ஆவணத்தை கொண்டு எதிர்மனுதாரர் தாவாவில் கண்ட 6ம் பிரதிவாதியான கண்ணமங்கலம் கிளை, பாரத ஸ்டேட் வங்கியில் தாவா சொத்தின் சர்வே எண்ணையும் குறிப்பிட்டு 21.02.2019ல் ஓர் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.319/2019 முன்னிலைக்கு ரூ.5,00,000/- மதிப்புக்கு உரிமை ஒப்படைப்பு ஆவணங்கள் எழுதி கொடுத்து உள்ளதாக மேற்படி சொத்து தொடர்பான வில்லங்கம் 14.03.2023ல் பார்த்த போது தெரிய வந்தது. மேற்கண்ட எதிர்மனுதாரர் மேற்கண்ட தாவாவில் கண்ட 6ம் பிரதிவாதி வங்கியுடன் சட்டத்திற்கு புறம்பான முறையில் தாவா சொத்தின் சர்வே எண்ணையும் குறிப்பிட்டு அடமானம்

வைத்து அதன் பேரில் ரூ.5,00,000/– சட்டத்திற்கு புறம்பாக கடன் பெற்றுள்ளது சட்டப்படி செல்லதக்கதல்ல.

6. மேலும் தாவா சொத்து சம்பந்தமாக வாதி பெயருக்கு பட்டா எண்.2630 ஆனது 13.10.2022ல் தாவாவில் கண்ட 4ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் சர்வே எண்.326/17பி ஏக்கர் 0.20 சென்ட் மற்றும் 326/17சி–யில் ஏக்கர் 0.16 3/4 சென்ட் வழுங்கப்பட்டு இருந்தது. ஆனால் மேற்படி 1ம் பிரதிவாதியானவர் தன்னுடைய பணபலம் மறும் படைபலம் கொண்டு தாவா சொத்து சம்பந்தமாக சர்வே எண்.326/17பி–யில் கண்ட ஏக்கர் 0.20 சென்ட்டுக்குண்டான வாதி பெயருக்கு வழுங்கப்பட்ட பட்டாவினை மேற்கண்ட 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் இரத்து செய்து விட்டு அதனை தன்னுடைய பெயருக்கு 12.01.2023ல் பட்டா எண்.2683 முன்னிலைக்கு சட்டத்திற்கு புறம்பாக 23.02.2009ல் உண்மைகளை மறைத்து சட்டத்திற்க்கு புறம்பாக மோசடியாக எழுதப்பட்ட செட்டில் மெண்ட் ஆவணங்கள் மூலம் பெயர் மாற்றம் செய்துள்ளார். இதுசட்டப்படி செல்லத்தக்கதல்ல.

7. மேற்கண்ட எதிர்மனுதாரர் 23.02.2009ல் ஏற்படுத்தி கொண்ட தான செட்டில்மெண்ட் பத்திர ஆவணத்தை கொண்டு தாவா ஷெட்யூல் மனுதாரர் ஆன மனுதாரர் அனுபவத்தை 25.04.2023ல் தடை ஏற்படுத்த முயன்றார். ஆனால் அதனை வாதி தக்க பஞ்சாயத்தார் துணை கொண்டு தடுத்து நிறுத்தி விட்டார். ஆனால் மீண்டும் எதிர்மனுதாரர் தாவா சொத்தில் மனுதாரர் அனுபவத்தை தடை ஏற்படுத்த போவதாக கூறி வருகின்றார். மேற்கண்ட எதிர்மனுதாரர் செயல் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் மனு சொத்து சம்பந்தமாக மனுதாரர் பெயருக்கு 16.03.2023ல் வீட்டு வரிக்கான இரசீது வழுங்கப்பட்டுள்ளது. எனவே மனு சொத்தின் மீதான மனுதாரருடைய அனுபவத்தை வாதி தடை ஏற்படுத்த முயற்சி செய்வதால் மனுதாரருக்கு எதிராக தாவா முடியும் வரையில் ஒரு இடைக்கால தடையுத்திரவு பரிகாரம் வழுங்க வேண்டிய அவசியம் உள்ளது என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

8. <u>**எதிருரையின் சுருக்கம்:–**</u>

மேற்படி மனுதாரர் மேற்கண்ட மனுவில் மனு ஷெட்யூலில் கண்டுள்ள சொத்தில் மனுதாரரின் அனுபவத்தை எதிர்மனுதாரர் தடை ஏற்படுத்த முயற்சி செய்வதால் தாவா முடியும் வரையில் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு வழுங்கி உத்திரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட மனுவானதுசட்டப்படியும் நியாயப்படியும் செல்லதக்கதல்ல. மனுவில் கண்ட சொத்தானது மனுதாரருக்கு சுயார்ஜ்ஜித முன்னிலைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று கண்டுள்ள சங்கதியினை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. மனு சொத்தானது சர்வே எண்.326/17ல் கண்ட மொத்த வீஸ்தீரணம் ஆன ஏக்கர் 0.67ல் ஏக்கர் 0.25 சென்ட் கொண்ட அயன் புன்செய் நிலம் ஆனது மேற்கண்ட எதிர்மனுதாரரின் தந்தை சீனிவாசன் என்பவருக்கு

பிதுராஜ்ஜித முன்னிலைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற சங்கதி உண்மையானது ஆகும்.

9. மனு பாரா 5ல் கண்டுள்ள சங்கதிகளை படி புன்செய் சர்வே எண்.326/17ஆனது சப்டிவிஷன் செய்யப்பட்டு அது 326/17எ-ல் கண்ட ஏக்கர் 0,30 சென்ட் வீஸ்தீரணம் ஆனது அருணாச்சலம் மகன் ராதாகிருஷ்ணன் பெயரிலும் சர்வே எண்.326/17பி ஆனது ஏக்கர் 0.20 கொண்ட இடம் வீதபத்திரன் கவுண்டர் மகன் சடைய கவுண்டர் பெயரிலும் மற்றும் சர்வே எண்.326/17சி-யில் கண்ட ஏக்கர் 0.17 சென்ட் கொண்ட இடம் ஆனது வீராசாமி மகன் முனுசாமி பெயரில் யூ.டி.ஆர்.ல் கண்டுள்ளவாறு அ பதிவேட்டில் கண்டுள்ளது என்ற சங்கதி உண்மையானது ஆகும்.

10. மனு பாரா 6ல் கண்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. அதில் கண்டுள்ளவாறு இவ்வெதிர்மனுதாரரின் தந்தை ஆன சீனிவாசன் தாவா ஷெட்யூலில் கண்ட சர்வே எண்.326/17ல் ஏக்கர் 0.25 சென்ட்டினை 20.08.1992ல் தொப்பை கவுண்டர் குமாரர் பூங்கான் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் அடிப்படையில் ஆவண எண்.681/1992 முன்னிலைக்கு கிரையம் செய்துவிட்டார் என்று கண்டுள்ள சங்கதியினை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. மேலும் மேற்கண்ட 2ம் பிரதிவாதி கிரையம் செய்த போது மேற்கண்ட கிரைய பத்திர ஆவணத்தில் தனக்காவும் மற்றும் தன்னுடைய மகள்கள் ஆன மைனர் குமார்த்திகள் உமா, லட்சுமி மற்றும் மைனர் குமாரர்கள் உமாபதி மற்றும் பிரபாகரன் ஆகியோர்களுக்காக சேர்ந்து கிரையம் செய்து உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை பொறுத்து மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. மேலும் 2ம் பிரதிவாதியின் மக்கள் ஆன உமா, லட்சுமி, உமாபதி மற்றும் பிரபாகரன் ஆகியோர்களுக்கு மேற்கண்ட 2ம் பிரதிவாதி 20.08.1992ல் தாவா சொத்து சம்பந்தமாக மேற்கண்ட பூங்கான் பெயருக்கு கிரையம் ஏற்படுத்தி கொடுத்தது பற்றி ஏதும் தெரியாது. மேற்கண்ட சங்கதிகளை பொறுத்து மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது.

11. மேற்கண்ட மனு பாரா-7ல் கண்டுள்ள சங்கதிகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டியது. அதில் கண்டுள்ள சங்கதியின் படி 21.01.2002ல் மேற்கண்ட பூங்கான் என்பவர் தான் கிரையம் பெற்ற தாவா சொத்தினை மனுதாரர் பெயருக்கு ஆவண எண்.33/2002 முன்னிலைக்கு கிரையம் செய்துவிட்டார் என்று கண்டுள்ள சங்கதியினை பொறுத்து இவ்வெதிர்மனுதாருக்கு நேரிடையாக ஏதும் தெரியாது. மேற்கண்ட சங்கதியினை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. மேற்கண்ட மனு பாரா-8ல் கண்டுள்ள சங்கதியான மேற்கண்ட மனுதாரர் முனுசாமி கவுண்டர் என்பவரிடம் 326/17ல் கண்ட ஏக்கர் 0.16 3/4 சென்ட் கொண்ட இடத்தினை 27.07.2000த்தில் ஆவண எண்.928/2000 முன்னிலைக்கு கிரையம் செய்து பெற்றார் என்றும் கண்டுள்ள சங்கதியினை பொறுத்து இவ்வெதிர்மனுதாரருக்கு நேரிடையாக ஏதும் தெரியாது. மேற்கண்ட சங்கதியினை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது.

12. மேற்கண்ட மனு பாரா 9ல் கண்டுள்ள சங்கதியின் படி மேற்கண்ட மனுதாரர் தாவா ஷெட்யூலில் கண்ட சர்வே எண்.326/17ல் ஏக்கர் 0.25 சென்ட்டினை பூங்கான் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார் என்றும் மேலும் மனுதாரர் சர்வே எண்.326/17ல் கண்ட ஏக்கர் 0.16 3/4 சென்ட்டினை அடைந்து வருகின்றார் என்று கண்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது.

13. மேற்கண்ட மனு பாரா 10ல் கண்டுள்ள சங்கதியின்படி மனுதாரர் பெயருக்கு13.10.2022 அன்று பட்டா எண்.2630 வழங்கினார்கள் என்றும் கண்டுள்ள சங்கதியினை மனுதாரரே நிரூபிக்க வேண்டியது ஆனால் மனு சொத்து சம்பந்தமாக இவ்வெதிர்மனுதாரருக்கு பட்டா எண்.2683 என்று 12.01.2023ல் வழங்கப்பட்டு அதன் பேரில் சர்வே எண்.326/17பி ஆனது சப்டிவிஷன் செய்யப்பட்டு இவ்வெதிர்மனுதாரர் பெயரில் பட்டா வழங்கப்பட்டு உள்ளது என்பது குறிப்பிடதக்கது ஆகும். மேலும் மனு சொத்து சம்பந்தமாக 2ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த மேற்கண்ட கிரைய பத்திரம் சம்பந்தமாக மேற்கண்ட நபர்கள் மேஜர் ஆன உடன் ஆட்சேபனை ஏதும் செய்யவில்லை என்று கண்டுள்ள சங்கதி உண்மைக்கு புறம்பானது ஆகும்.

14. மேற்கண்ட மனு பாரா 11ல் கண்டுள்ள சங்கதியின்படி பிரதிவாதியானவர் தாவா சொத்து சம்பந்தமாக 23.02.2009ல் ஓர் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை இவ்வெதிர்மனுதாரர் பெயருக்கு ஆவண எண்.328/2009ன் பேரில் 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் வைத்து எழுதி கொடுத்து உள்ளார் என்ற சங்கதி உண்மையானது ஆகும். ஆனால் மேற்கண்ட மனுதாரருக்கு மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை ஆட்சேபனை செய்வதற்கு சட்டப்படி எவ்விதமான முகாந்திரமும் கிடையாது. மேலும் மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியான ஆவணம் என்று மனுதாரர் கூறுவது சட்டப்படி செல்லதக்கதல்ல. மேலும் மேற்கண்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை கொண்டு இவ்வெதிர்மனுதாரர் தாவாவில் கண்ட 6ம் பிரதிவாதியான கண்ணமங்கலம் பாரதஸ்டேட் வங்கியில் தாவா சொத்தின் சர்வே எண்ணை குறிப்பிட்டு கடன் பெற்றுள்ளார் என்று கண்டுள்ள சங்கதி உண்மையானது ஆகும். ஆனால் இவ்வெதிர்மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களையும் சேர்த்துதான் மேற்கண்ட 6ம் பிரதிவாதியின் வங்கியில் கடன் பெற்றுள்ளார். இது சம்பந்தமாக இவ்வெதிர்மனுதாரர் 6ம் பிரதிவாதி வங்கி பெயருக்கு 21.02.2019ல் ஓர் உரிமை ஒப்படைப்பு ஆவணங்கள் எழுதிக்கொடுத்து உள்ளதாக கண்டுள்ள சங்கதி உண்மையானது ஆகும். ஆனால் மேற்கண்ட ஆவணங்களை இரத்து செய்ய வேண்டும் என்று மனுதாரர் கோருவது சட்டப்படி செல்லத்தக்கதல்ல.

15. மேற்கண்ட மனு பாரா–12ல் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை அதில் கண்டுள்ளவாறு மனுதாரர் பெயருக்கு மனு சொத்து சம்பந்தமாக பட்டா எண்.2630 ஆனது 13.10.2022ல் 4ம் பிரதிவாதி அலுவலகத்தின் மூலம் சர்வே எண்.326/17பி–ல் ஏக்கர் 0.20 சென்ட் மற்றும் சர்வே எண்.326/17சி–யில் ஏக்கர் 0.16

3/4 சென்ட் உள்ளது என்றும், ஆனால் மனு சொத்தான சர்வே எண்.326/17பி–யில் கண்ட 0.20 சென்ட்க்கு உண்டான வீஸ்தீரணம் ஆனது முதலில் மனுதாரர் பெயருக்கு வழங்கப்பட்டு இருந்ததாகவும் அதன் பிறகு அதனை இரத்து செய்துவிட்டு பட்டா எண்.2683 முன்னிலைக்கு இவ்வெதிர்மனுதாரர் பெயருக்கு மோசடியாக பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று கண்டுள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்யவேண்டியது.

16. மேற்கண்ட மனு பாரா 13ல் கண்டுள்ள சங்கதியின் படி இவ்வெதிர்மனுதாரர் மனு சொத்தில் மனுதாரரின் அனுபத்தை 25.04.2023ல் தடை ஏற்படுத்த முயற்சி செய்கின்றார் என்று கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு மாறானவை மேற்கண்ட சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டியது. மேலும் மனு சொத்து சம்பந்தமாக மனுதாரர் பெயருக்கு 16.03.2023ல் வீட்டு வரி இரசீது வழங்கப்பட்டுள்ளது என்று கண்டுள்ள சங்கதியினை மனுதாரரே நிரூபணம் செய்யவேண்டியது.

17. உண்மையில் மனு ஷெட்யூலில் கண்ட சொத்தானது ஆதியில் 2ம் பிரதிவாதிக்கு பிதுராஜ்ஜித முன்னிலைக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். மேற்கண்ட 2ம் பிரதிவாதி தாவா சொத்தினை அடைந்து அனுபவித்து வந்தார். அதன் பேரில் 2ம் பிரதிவாதி பெயருக்கு 28.08.1992ல் தாவா சொத்து மற்றும் குடும்ப சொத்து சம்பந்தமாக பட்டா எண்.365 வழங்கப்பட்டுள்ளது. அதன் பிறகு 2ம் பிரதிவாதி இவ்வெதிர்மனுதாரர் பெயருக்க 23.02.2009ல் தாவா சொத்து மற்றும் குடும்பத்திற்க்க பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து ஆவண எண்.328/2009 முன்னிலைக்கு பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திர ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார். மேற்கண்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை இவ்வெதிர்மனுதாரர் சட்டப்படி அடைந்து அனுபவித்து வருகின்றார். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட வருவாய் துறையினர் மூலம் இவ்வெதிர்மனுதாரர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. எனவே மனு சொத்து சம்பந்தமாக மனுதாரர் மேற்கண்ட மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பொறுத்து மனுதாரரே தக்க ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்யவேண்டியது. தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் எதிருரை தாக்கல் செய்து கொள்ள தனது உரிமையினை இப்பிரதிவாதி ரிசர்வ் செய்து கொள்ள உரிமை கோருகின்றார். எனவே மேற்படி மனுவினை இவ்வெதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் சேர்த்து தள்ளுபடி செய்ய உத்திரவிடுமாறு எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

18. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

19. மனுதாரர்கள், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம், ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

20. **<u>தீர்வு:–</u>**

மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவிற்கு பல வாய்ப்புகள் அளித்தும் வாதுரை செய்யாததால் இந்த மனுவை உத்தரவிற்காக ஒத்திவைத்து 31.07.2025 தேதிக்குள் எதிர்மனுதாரர் தரப்பில் எழுத்துமூலமான வாதுரை தாக்கல் செய்யவோ அல்லது வாய்மொழி வாதுரை செய்யவோ வாய்ப்பு வழங்கப்பட்டு உத்தரவிற்காக 01.08.2025ம் தேதிக்கு வாய்தா ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் வாதுரை செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கானது வழக்கு சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் வேண்டியும், 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதி பெயருக்கு 23.02.2009ம் தேதி எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.328/2009 என்ற ஆவணத்தை ரத்து செய்ய 4ம் பிரதிவாதிக்கு உத்தரவிடவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் வழக்கு சொத்தை மனுதாரர் அனுபவம் செய்வதை எதிர்மனுதாரர் தடை செய்ய முயற்சி செய்வதால், வழக்கு முடியும் வரையில் எதிர்மனுதாரருக்கு எதிராக இடைகால தடையுத்தரவு வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

21. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், வழக்கு சொத்து எதிர்மனுதாரரின் தந்தை சீனிவாசனுக்கு பிதுராஜ்ஜிதமாய் கிடைத்த சொத்தாகும். 2ம் பிரதிவாதி இந்த எதிர்மனுதாரருக்கு 32.02,2009 தேதியில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தை வழக்கு சொத்தை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பயன்படுத்தி இந்த எதிர்மனுதாரர் 6ம் பிரதிவாதியான State Bank of India, Kannamangalam –த்தில் இந்த வழக்கின் சர்வே எண் குறிப்பிட்டு கடன் வாங்கியுள்ளார். உரிமை மூல ஆவணங்களை ஒப்படைப்பு செய்து மேற்படி கடனை இந்த எதிர்மனுதாரர் வாங்கியிருக்கிறார். தான செட்டில்மெண்ட் பத்திரப்படி இந்த எதிர்மனுதாரர் சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து வருகிறார். இந்த எதிர்மனுதாரர் பெயரில் பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

22. வழக்கு சொத்தை பொறுத்து உரிமை விளம்புகை செய்யவேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருதரப்பிலும் வழக்கு சொத்திற்கு உரிமை மூல ஆவணங்கள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். மனுதாரர் தனது மனுவில் வழக்கு சொத்தில் அனுபவத்தில் இருப்பதாக விவரம் கூறியிருக்கிறார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தனது பெயரில் பட்டா இருப்பதாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார். வழக்கு சொத்து குறித்து யாருக்கு உரிமை மூலம் உள்ளது என்பதை இருதரப்பு விசாரணையின் பேரில்தான் தீர்வு காணமுடியும். வழக்கு சொத்தை இரு தரப்பினரும் அனுபவம் செய்வதாக கூறியுள்ள நிலையில், மனுதாரர் இந்த மனு மூலம் இடைகால தடையுத்தரவு கோரியிருப்பது ஏற்கும் வகையில் இல்லை. அசல் வழக்கில் துணை

பரிகாரமாக நிரந்தர தடையுத்தரவு பரிகாரம் கோரப்பட்டுள்ளது. இந்த மனுவில் இடைகால தடையுத்தரவு கோரப்பட்டுள்ளது. இந்த மனுவை அனுமதித்தால் விசாரணைக்கு முன்பு ஏற்படும் தீர்ப்பாணையாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இந்த மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKAREN S Digitally signed by BASKARAN S Date: 2025.09.11 17:43:44 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்</u>** இல்லை

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2025.09.11 17:43:55 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.